# JUDICIAL MAGISTRATE COURT NO.I CHENGALPATTU

## CC No. 21/2023

## DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)

*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.I CHENGALPATTU. |
| Deposition of witness for | : PW- 1 |
| Name | : திரு. அபுபக்கர் |
| Father/Husband's Name | : பக்ருதின் |
| Village | : நெ.4, அழகேசன் நகர் |
| Taluk | : செங்கல்பட்டு |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 24 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 08.05.2025.

A2, A3, A4 present. A1 absent. Petition allowed online.

**முதல் விசாரணை–**

நான் தற்போது செங்கல்பட்டில் வசித்து வருகிறேன். கடந்த 28.09.2022 அன்று நான் பேஸ்புக் குருப் Irobinpro என்பதில் ஐபோன் 13 குறைந்த விலையில் விற்பனைக்கு இருப்பதாக post ஒன்றை பார்த்தேன். பேஸ்புக் மூலமாக செல்போனை எண்ணை பெற்று வாட்ஸ்அப் மூலமாக தொடர்பு கொண்டேன். அந்த எண் தற்போது அதிக நாட்களாகிவிட்டதால் நினைவில்லை. அந்த ஐபோனின் விலை ரூ.39,000/– என்று அந்த விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. மேற்படி ரூ.39,000/– தொகையினை நான் ஆன்லைன் மூலமாக அனுப்பி வைத்தேன். கடையில் ரேசர்பே மூலமாக ரூ.10,000/– என 3 முறையும், மீதி தொகையினை ஜிபே மூலமாக அனுப்பினேன்.

பணம் செலுத்தியவுடன் மறுநாள் பார்சலை அனுப்பியிருந்தார்கள். அந்த பார்சலில் காலி பாக்ஸ் மட்டும் தான் இருந்தது. அதில் போனை அனுப்பவில்லை. இது சம்மந்தமாக நான் சைபர் க்ரைம் போலிசாரிடம் புகார் அளித்தேன். சாட்சியிடம் புகார் காண்பிக்கப்பட்டது. அதில் உள்ள கையொப்பம் தன்னுடையது என்றும், அதில் உள்ள

விவரங்களை நான் எழுதவில்லை யார் எழுதினார்கள் என்று தற்போது நினைவில்லை. **அந்த புகாரில் உள்ள கையொப்பம் அதசாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என்னிடமிருந்து பெறப்பட்ட ரூ.39,000/– தொகையானது நான் புகார் அளித்த பிறகு எதிரிகள் என்னிடம் கொடுத்துவிட்டார்கள்.

**1 முதல் 4 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை–**

போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். நான் எதிரிகள் நான்கு பேரிடமிருந்து ரூ.39,000/– பெற்று கொண்டு அவர்களுடன் சமாதானம் ஆகிவிட்டேன் என்றால் சரிதான்.

**நீதிமன்ற கேள்வி –**

தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். மேற்படி சமாதானம் ஆவதற்கு என்னை யாரும் வற்புறுத்தவில்லை என்னுடைய விருப்பத்தின் பேரில்தான் சமாதானம் ஆகிறேன். **எனது சமாதான மனு நீ.ம.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**மறுவிசாரணை–** இல்லை.

Sd.xxx

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd.V.Lavanya,
Judicial Magistrate No.I,
Chengalpattu.

# JUDICIAL MAGISTRATE COURT NO.I CHENGALPATTU

## CC No. 21/2023

## DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)

*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.I CHENGALPATTU. |
| Deposition of witness for | : PW- 2 |
| Name | : திரு. பக்ருதின் |
| Father/Husband's Name | : அப்துல்லா ரகுமான் |
| Village | : நெ.4, அழகேசன் நகர் |
| Taluk | : செங்கல்பட்டு |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 51 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 08.05.2025.

A2, A3, A4 present. A1 absent. Petition allowed online.

**முதல் விசாரணை–**

நான் தற்போது செங்கல்பட்டில் வசித்து பிவிசி பைப் சப்ளை செய்து வருகிறேன். அசா 1 எனது மகன். ஒரு வருடத்திற்கு முன்பு போன் ஒன்றை பேஸ்புக்கில் பார்த்ததாக என் மகன் என்னிடம் சொன்னார். நான் அது வேண்டாம் என்று சொன்னேன் விலை குறைவாக இருப்பதால் வாங்கி கொள்கிறேன் என்று எனது மகன் கூறினார். பணம் ரூ.39,000/– செலுத்திய பிறகு இரண்டு நாள் கழிதது ஒரு பாக்ஸ் வந்தது. ஆனால் அந்த பாக்சில் எதுவுமே இல்லை. இது சம்மந்தமாக சைபர் க்ரைம் போலிசாரிடம் புகார் எனது மகன் அளித்தார். இது சம்மந்தமாக என்னை போலிசார் விசாரிக்கவில்லை.

**1 முதல் 4 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை–**

எனக்கு மேற்சொன்ன விவரங்கள் எதுவும் நேரடியாக தெரியாது எனது மகன் கூறி தான் தெரியும் என்றால் சரிதான். 1 முதல் 4 எதிரிகள் மற்றும் எனது மகன் சமாதானம் ஆகிவிட்டார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும்.

**மறுவிசாரணை–** இல்லை.

Sd.xxx

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd.V.Lavanya,
Judicial Magistrate No.I,
Chengalpattu.